**பலாங்கொட நகர சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 யூன் 03 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 18 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பலாங்கொட நகர சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 1.24 இன் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட தொகைகளும் உள்ளபடியான தொகைகளும் வெவ்வேறாக புலப்படும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பாதிடப்பட்ட தொகையை விஞ்சியிருக்காமை அல்லது விஞ்சியமை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் அடிக்குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 6,459,755 தொகை திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படாது ஆண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இரண்டு வங்கிக் கணக்குகளின் வங்கிக் கணக்கிணக்கக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 4,098,785 கூட்டுத்தொகையான 12 பல்வேறு மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரிக் கணக்கில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி பேரேட்டுக் கணக்கின் படி ரூபா 8,143,378 ஆக இருந்த போதிலும் வரிப் பதிவேட்டின் படி ரூபா 8,302,782 ஆனமையால் ரூபா 159,404 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 5,271,071 தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டிருந்தும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 7,105,118 கூட்டுத்தொகையான 232 காசோலைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 486 | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புச் செய்யப்பட்டிருந்தும் மதிப்பிழந்த ரூபா 2,153,058 கூட்டுத்தொகையான 50 காசோலைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 751 | ரூபா 523,950 கூட்டுத்தொகையான 17040 கொங்கிரீட் சிறுகற்கள் (Inter Locking Blocks) இருப்புப் புத்தகத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| | 1.3.2 வழிகாட்டி | கூறுவிலை கோராமல் 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 485,286 கூட்டுத்தொகையான பொருட்களும் சேவைகளும் சபைக்குரிய விருந்தினர் விடுதிக்காகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதி IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 146,700 தொகையான கணனி உட்பட உப பாகங்கள் மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட 31 கணனிகள் சபையிடம் காணப்பட்ட போதிலும் சுற்றறிக்கையின் படி கணனிச் சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 7,207,355 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,295,804 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,911,551 தொகையான வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த மீண்டெழும் வருமானம் ரூபா 6,169,328 இனால் அதிகரித்திருந்த போதிலும் போக்குவரத்து, தொடர்பாடல் மற்றும் ஏனைய சேவைகள் மற்றும் மூலதனச் சொத்துக்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பிற்காக செய்யப்பட்ட செலவினம் முன்னைய ஆண்டினை விட ரூபா 9,569,716 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட நிதி விளைவின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 6,503 | 6,900 | 1,285 |
| வாடகை | 1,000 | 758 | 409 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 8,120 | 8,304 | 652 |
| ஏனைய வருமானம் | 7,073 | 6,821 | 956 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 01 வருடத்திற்கு மேற்பட்ட நிலுவை ஆதனவரி மற்றும் கடை வாடகை முறையே ரூபா 61,006 மற்றும் ரூபா 352,179 ஆக இருந்தன.

(ஆ) மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அறவிடுவதற்கு முடியாதிருந்த ரூபா 2,387,186 தொகையான 02 வருமான விடயங்கள் காணப்பட்டன.

(இ) 07 வாடகையாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 7,058 கூட்டுத்தொகையான நிலுவை வாடகைகளில் நிலுவையாக இருந்த கால எல்லை 22 முதல் 48 மாதங்கள் வரை இருந்தது.

(ஈ) புதிய பஸ் நிலையத்தின் 15 கடைகளின் ரூபா 942,923 கூட்டுத்தொகையான நிலுவை வாடகை மற்றும் ரூபா 117,000 கூட்டுத்தொகையான பொதுச் சந்தையின் இரண்டு

கடைகளின் நிலுவை வாடகை மற்றும் தாமத தண்டப் பணங்களை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கடந்த 07 காலாண்டுகளுக்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படவேண்டிய பெறுமதிசேர் வரித் தொகை ரூபா 8,302,782 ஆகும்.

(ஆ) 2009 யூலை மாதம் முதல் 2012 பெப்ரவரி மாதம் வரையான காலத்தில் 06 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 768,460 முற்பணம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் பஸ் நிலையத்துடன் சந்தைத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக 2005 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 111,209,828 தொகையான கடன் பணத்தில் 2008 பெப்ரவரி 15 ஆந் திகதி ரூபா 20 மில்லியன் ஒரே தடவையில் தீர்க்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் காலாண்டு ரீதியாகச் செலுத்த வேண்டிய நிலுவைக் கடன் தவணைப் பணம் ரூபா 91,209,828 தொகை மற்றும் வட்டி ரூபா 43,427,893 ஆக இருந்தது.

(ஈ) 2013 செப்தெம்பர் 03 ஆந் திகதி முதல் 2013 நவம்பர் 30 ஆந் திகதி வரையான 03 மாத காலத்தை தெரிவாகக் கொண்டு விடுதிகளுக்கு வருகை தந்த சுற்றுலாப் பிராணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பதிவேட்டுப் பரிசோதனையின் போது சுற்றுலாப் பயணிகளின் பதிவேட்டில் குறிப்பிடப்படாது தங்குமிடங்களைப் பெற்ற 54 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(உ) சபைக்குரிய வங்கிக் கணக்கிற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் ரூபா 1,000,00 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தொடர்ச்சியாக எந்தக் காரணமும் காண்பிக்கப்படாது காசு மீதியில் சீராக்கப்பட்டிருந்தது.

(ஊ) மழைநீர் வழிந்தோடும் வடிகாண் முறைமையொன்றை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் 2005 ஆம் ஆண்டிற்கு முன்பு சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 8,815,586 தொகையான கடன் பணத்தை மீளவும் அந்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டியமை தேசிய பிணக்குகள் தீர்க்கும் நிலையத்தினால் தீர்வு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 5,358,264 தொகையான நிலுவை வட்டியுடன் ரூபா 14,173,850 கூட்டுத்தொகையைச் செலுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதிக்கூற்றுக்களில் இது தொடர்பாக எவ்வித வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

விருந்தினர் விடுதிகளுக்காக வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பகம் 2013 திசெம்பர் 04 கணக்காய்வுத் திகதி வரையிலும் அதில் பண வைப்புக்களைச் செய்வதற்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் அப்பணம் விடுதி முகாமையாளரின் தனிப்பட்ட பொறுப்பில் காணப்பட்டது.

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பெறுமதிசேர் அடிப்படையில் செலுத்தவேண்டிய ரூபா 172,806 தொகையான வரி ரூபா 157,979 ஆக மதிப்பீடு செய்யப்பட்டமையால் நிலுவையான ரூபா 14,827 தொகையான வரிக்காக ரூபா 14,848 தொகை தண்டப்பணமாகச் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**3.4 ஒப்பந்த நிருவாகம்**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைத்த நிதி ஏற்பாட்டின் மூலம் ரூபா 970,689 தொகை செலவிடப்பட்டு பலாங்கொடை சனசமூக மண்டபம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாணத்திற்காக சுற்றளவு 2000 மில்லி மீற்றர் வீதம் 05 மரங்களும் 1500 மி.மீ மற்றும் 1000 மி.மீ. வீதம் 02 மரங்களும் ரூபா 25,447 தொகை செலவிடப்பட்டு அகற்றப்பட்டிருந்த போதிலும் அந்த மரங்கள் 2013 திசெம்பர் 12 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது.

(ஆ) சுனந்தாராம உப வீதி உள்ளக இணைப்புக்காக சிறு கொங்கிரீட் கற்களை இடும்போது வீதியில் கல்தூள் போடப்பட்டு அதன் மேல் கற்களைப் பதிப்பதற்காக 85.75 சதுர அடிக்காக ரூபா 169,005 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 12 ஆந் திகதி வரையில் 76.33 சதுர மீற்றர் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதனால் 9.42 சதுர மீற்றருக்கான ரூபா 18,566 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பலாங்கொடை பொதுச் சந்தைக்காக 40 மேலதிக கூடாரங்களை நிர்மாணிக்கும் போது கூரைக்காக ஈடுபடுத்தக்கூடிய தீராந்தியின் நீளம் 11 அடியாக இருக்க வேண்டிய போதிலும் அதன் நீளம் 10.5 அடியாக பூர்த்திசெய்யப்பட்டமையினால் ரூபா 16,773 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் பொருத்தும் போது 12 தீராந்தியின் வடிவங்களும் வேறுபட்டிருந்தன. தீராந்திகளை தூண்களுடன் இணைக்கும் போது ஆணிகள் ஈடுபடுத்துவதற்குப் பதிலாக அவை தூண்களுடன் வைத்து வேல்டின் செய்யப்பட்டிருந்தமை 2013 திசெம்பர் 11 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறே கூரையின் நீளம் 120 அடிக்காக தகரம் ஈடுபடுத்தப்படாதிருந்த போதிலும் அதற்காக ரூபா 21,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.5 வெளிப்படையான மோசடிகள்**

தங்குமிட வசதி மற்றும் உணவு பானங்கள் பெறப்பட்டதாக பலாங்கொடை விடுதி முகாமையாளர் ரூபா 157,982 தொகையான பற்றுச்சீட்டுக்களை வழங்கியிருந்த போதிலும் விடுதியின் நாளாந்த வருமானப் பதிவேடு மற்றும் பற்றுச்சீட்டுக்களின் அலுவலகப் பிரதியின் படி ரூபா 9,225 மாத்திரம் வருமானமாகக் கிடைத்திருந்தது. இதனால் ரூபா 148,757 தொகை விருந்தினர் விடுதிக்கு இழப்பாகியிருந்தது.

**3.6 பதவியணியினர் நிருவாகம்**

(அ) சபையில் 2013 திசெம்பர் 06 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட அலுவலக உதவியாளர்களின் எண்ணிக்கை 07 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறு வெற்றிடம் 06 ஆக இருந்தது. அந்த வெற்றிடங்களுக்காக அமைய அடிப்படையில் 06 பேர் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அவர்களில் மூன்று பேருக்கு கடமைகள் கையளிக்கப்படாமல் 2013 நவம்பர் மாதம் முதல் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவயிணயிரில் இல்லாத அமையத் தொழிலாளர் பதவி என 41 பேருக்காக மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 6,067,364 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்